Registered as a newspaper in Ceylon.

# தொண்டன்

கத்தோலிக்க மாத ஏடு.

மலர் 2 ★ மட்டக்களப்பு ★ 1970 - ஆடி ★ விலை 25 ★ இதழ் 6



## உனது எதிர்காலம் என்ன?

ஏற்றிய தீபத்தைக் கையில் ஏந்திய வண்ணம் தனது மூச்செல்லாம் ஒருங்கு சேர்த்தும் போட்டியின் அந்தத்தைக் கடக்கும் எண்ணத்துடன் புழுதிப் படலத்தையும் பொருட்படுத்தாது ஓடுகிறுன் ஒலிம்பிக் விளையாட்டு வீரன். 'அம்மா' என்று விளித்துக்கொண்டே, உண்டாகிய பசியின் களையைப் பாலுண்டு போக்கப் பசுவை நாடுகின்றது இளங்கன்று. அதோ.... அங்கே! பகலவனின் கொடுமைக்குள்ளாகிப் பச்சையே காணமுடியாது தகதகக்கும் செந்தரையாக விளங்குகின்ற சகாராப் பாலைவனத்தைத் தாண்டும் ஒரே நோக்கோடு ஒட்டகத்தின் உதவியுடன் விரைநடை போடுகின்றது ஓர் உருவம்.

ஆம்! இதுவரை நாம் கண்டது உலகவாழ் உயிர் ஜெந்துகள் ஏதோ ஓர் இலக்கை நோக்கி நடை பயில்கின்றன என்பது தான். இதற்கு மனிதன் மட்டும் விதிவிலக்கல்ல.

★

அன்னை பிதாக்களோடுதொடங்கிக் குதலை மொழி பேசிக் கொஞ்சி விளையாடும் குழந்தைப் பருவத்திலிருந்து வனப்புடன் துலங்கும் வாலிப பருவத்தில் விளங்கி மூப்போடு மடிகின்ற முதுமைப் பருவத்துடன் உலகிலிருந்து விடை

[16ம் பக்கம் பார்க்கவும்]

"திருச்சட்டத்தை [illegible] வேற்றவே வந்தேன்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவழிபாட்டுச் சிந்தனைகள்

## (16) திருப்பலியில் நாம் பங்குகொள்ளுதல்

திருப்பலி என்பது திருவழிபாடு. இறைவனைச் சிறந்த முறையில் வழிபடுதல். நமது சகலவகைச் செபங்கள், தபங்கள் யாவற்றிலும் மேலானது, உன்னதமானது திருப்பலி ஒப்புக் கொடுக்கும் திருவழிபாடு தான். இறைவன் நமக்களித்த அளப்பரிய நன்மைகளுக்காக கிறீஸ்துவையும், அவரோடு நம்மையும் முற்றாக அர்ப்பணிக்கும் இத்திரு வழிபாட்டை — பூசையைவிட மேலானது வேறு இல்லை.

இயேசு இத்திருப்பலியை ஏற்படுத்திய போது ''உங்களுக்காக கையளிக்கப்படும் என் சரீரம்'' என்றும் ''இது எல்லாருக்காகவும் சிந்தப்படும் என் இரத்தம்'' என்றும் கூறினார். இதிலிருந்து இத்திருவழிபாடு தனிப்பட்ட ஒருவருக்குரியதல்ல; எல்லாரும் சேர்ந்தே கூட்டாக நிறைவேற்றவேண்டியது என்பது தெரிகிறது. இக்காரணத்தாலேயே ஆதிக் கிறீஸ்தவர்கள் - பெருங்கூட்டமாக ஆலயங்களில் கூடினார்கள். இறைவனை கூட்டாக வழிபட்டார்கள்.

இதே காரணத்தால்தான் நாமும் இன்று கூட்டம் கூட்டமாக ஆலயத்துக்குச் செல்கிறோம். ஆனால் கூட்டமாக, ஒருமித்துத் திருவழிபாட்டு நிகழ்ச்சிகளில் பங்கு கொள்கின்றோமா? இவ்விதம் பங்குகொள்ளுதல் இரு வகையில் நடைபெறலாம். ஒன்று உள்ளரங்கமான (மனதால்) ஈடுபாடு, மற்றது வெளியரங்கமான (செயலால்) ஈடுபடுதல். உள்ளரங்கமான - உண்மையாகவே உள்ளத்தாலும், விருப்பத்தோடும் ஈடுபடுதல் அவசியம். மனஉணர்ச்சியின்றி — வெளிச்செய்கையால் மட்டும் ஈடுபடுவது வெறும் வெளிப்பாவனையாகவே முடியும். எனவே உள்ளும், புறமும் ஒருங்கிணைய ஈடுபடுதலே சாலச் சிறந்தது.

பொ. இராமலிங்கம்

புனித பாப்பானவர் 15ம், ஆசிர்வாதப்பர் இவ்வித ஈடுபாட்டைப்பற்றிக் கூறும்போது ''........யாவரும் செபங்கள், கிரிகைகள், பாடல்கள் யாவற்றிலும் பங்குகொள்ள வேண்டும்'' என்கிறார். 11ம், பத்திநாதர் ''இறைமக்கள் வெறும் ஊமைப் பார்வையாளராக'' இருக்கக்கூடாது என்கிறார்.

உண்மைதான். இவ்வளவு காலமும், குருவானவர் நமக்கு விளங்காத பாஷையில் ஏதோ சொல்லிக்கொண்டு, நமக்கு மறைத்துக்கொண்டு ஏதேதோ செய்ய நாம் வெறுமனே பார்த்துக்கொண்டு இருந்துவிட்டு வெளியே சென்றோம். திருச்சபையின் கற்பனைப்படி நமது கடமை முடிந்தது ஆனால் உண்மையாகவே பலி ஒப்புக்கொடுத்தோமா,? இறைவனைச் சரியான, அவருக்கே உரித்தான, விருப்பமான முறையில் வழிபட்டோமா.? இந்நிலை மாறவேண்டும்; மக்கள் தாம் சொல்வதை, செய்வதை உணரவேண்டும். சரியான முறையில் வழிபட்டு ''இறைவனுக்கு மேலான மதிப்பும், மகிமையும்'' அளிக்கவேண்டும் எனத் திருச்சபை விரும்புகிறது. இதுவே 2ம், வத். சங்கம் நமக்களித்துள்ள மாபெரும் வரப்பிரசாதம், நன்கொடை.

எனவே நாம் சரியான முறையில் நம் உள்ளத்தாலும், உடலாலும் இறைவனை வழிபட முன்வரவேண்டும். எப்படி.?

பூசை என நாம் சாதாரணமாகக் கூறிக்கொள்ளும் திருவழிபாட்டில் பல பிரிவுகளுண்டு. அதேபோல் அவ்வப்பிரிவுகளைச் சரியாய் நிறைவேற்ற ஆலயத்திற் கூடியிருப்பவர்களிலும் பிரிவுகளுண்டு. குரு, சிலவேளை உதவிக்குரு, நிருபம் வாசகங்கள் வாசிப்போர், பூசைப்பரிசாரகர், பாடகர்குழு, மக்கள் என்பன அவை. இவர்கள் யாவரும் தத்தமக்குரிய பகுதிகளை எல்லாரும் ஒருமித்து நிறைவேற்றும்போதுதான் திருவழிபாடு நிறைவுறுகிறது. திருவழிபாட்டில் இது எதுவும் வேறு, வேறு அல்ல. மக்கள் யாவரும் இக்கிரிகைகளைச்செய்ய இயலாது. ஆனால் மக்கள் தாமும் இவர்களுடன் சேர்ந்து ஒரே மக்களாக ஈடுபடவேண்டும்.

குரு சொல்லும் ஒவ்வொரு வார்த்தையையும், நாமும் சொல்லவேண்டும். புனித கிளெமென்ற் பாப்பானவர் கொரிந்தியருக்கு எழுதிய நிருபத்தில் (அதி. 42) ''.......தலைமை

[3ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## இறைவழிபாட்டுச் சிந்தனைகள்

[2ம் பக்கத் தொடர்ச்சி]

வகிக்கும் குரு தமக்கென வகுக்கப்பட்ட பாகத்தையும், மக்கள் திருவழிபாட்டில் தமக்கென வகுக்கப்பட்டுள்ள பாகத்தையும் ஒழுங்காக நிறைவேற்றுவார்களாக'' எனக் கூறியுள்ளார்.

கி. பி. 6ம், நூற்றுண்டளவில் புனித கிறகோரியார் திருவழிபாட்டு முறையை அழகாக ஒழுங்கமைத்துள்ளார். திருச்சபை ஒழுங்குப்படி கிறீஸ்தவ சமூகம் கூட்டுமுறைச் செபங்கள், அறிவுரைகள், பாடல்களை அனுசரிக்கவேண்டும். அதன்படி முதலாவது; குரு தம் துணைவருடன், பூசைப்பரிசாகருடன் பீடத்தண்டை பிரவேசிக்கிறூர். பிரவேச வேளை பயிற்றப்பட்ட பாடகர்களோடு சேர்ந்து மக்கள் அனைவரும் பாடுகின்றனர்.

பிரவேச வாக்கியம் ஒருவரால் பாடப்படுகிறது. நாம் எல்லோருமே சேர்ந்து எழுந்து நின்று பாடவேண்டும்; பிரவேச வாக்கியம் சொல்லவேண்டும். பின் குரு மக்கட்கு வணக்கம் செலுத்தி, பாவப்பரிகாரம் செய்கிறூர், இறைவனை வேண்டுகிறூர். நாமும் எல்லாரும் அவருடன் சேர்ந்து வெளியரங்கமான மனஸ்தாபம் காட்டி, மன்னிப்பு வேண்டவேண்டும். இதனுல் நம்மிடம் இருக்கக்கூடிய அற்பபாவங்கள் அற்றுப்போகின்றன.

இரண்டாவது இறைவன் நமக்குக்கூறும் அறிவுரைகள். இவை வெறும் வாசிப்பு என்று கருதக்கூடாது (ஆண்டவரின் அருள்வாக்கு) இறைவன் நம்மோடு பேசுவது. ஆகவே கவனமாகக் கேட்கவேண்டும். நற்செய்தி குருவாலேயே (வசதியானபோது டீக்கன் என்னும் துணைவரால்) வாசிக்கப்படும். புனிதமான வாசிப்பு ''இது ஆண்டவரின் அருள் வாக்கு'' எனவே எழுந்துநின்று மரியாதை செலுத்தக் கவனமாகக் கேட்கவேண்டியது அவசியம். பிரசங்கமும் அறிவுரைதான். ஆகவே இருந்து கேட்கவேண்டும்.

இதன்பின்பு சமூகம் ஒன்றுய் பலியிடுதலுக்கு ஆயத்தமாகிறது. ஆதிகாலத்தில் தாம் இறைவனுக்கு அளிக்கும் பொருட்களை (பால், பழம், நெய், அப்பம்) ஆடம்பரமாக வரிசையாகப் பீடத்தண்டை கொண்டுவந்து குருவிடம் ஒப்புக்கொடுத்தார்கள். இப்போது இரசமும் அப்பமும் மாத்திரம். மக்கள் ஏனைய பொருட்களைக் கொடுப்பது சாத்தியமில்லையெனக்கண்டுதான் காணிக்கைவாங்கும் வழக்கம் ஏற்பட்டது.

காணிக்கைப் பொருட்களைக் கையேற்ற குரு அவற்றை இறைவனுக்கு அர்ப்பணிக்கிறூர். இக்காணிக்கையிலேயே நம்மையும் முற்றுகச் சேர்த்து அர்ப்பணிக்கிறேம். பொற்தட்டின் மேல் ஏனைய பொருட்களோடு நம்மையும் வைத்தே அர்ப்பணிக்கிறேம்.

பின் பரிசுத்தர், பரிசுத்தர் என்ற மகிமைக்கீதம் பாடுகிறேம். குருவின் வசீகர வார்த்தையால் நமது பலி நிறைவேறுகிறது. இறைவன் நமது பலியை ஏற்றுக்கொண்டபின் நமக்குத்தம் அன்பளிப்பை வழங்குகிறூர் நமது தகுதியில்லாத்தன்மையை வெளிப்படுத்தி அதனைப்பெற்றுக்கொள்ளவேண்டும். மறுப்பது நன்றியீனம். முழுப்பங்கும் பெறவில்லை.

பாடகர் வேறு, நாம் வேறு அல்ல. பாடகர் நமக்குத் துணைசெய்வோர். அவர்கள் பாடுவது நமக்காக. ஆகவேதான் நாம் ஊமைப்பார்வையாளராகயின்றி சேர்ந்து பாடவேண்டும். நாமும் சேர்ந்து இறைவனைத் துதிபாடும்போது எப்படி இடையில் எழும்பி வெளியே செல்லலாம்.? குருவும், பாடகரும், நாமும் சேர்ந்தே ஒன்றுக வழிபடுகிறேம். இதுதான் சரியான திருவழிபாடு

நமது வழிபாட்டுக்கு ஏற்க சில நடைமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. எழுந்து நிற்றல் முழந்தாளிடல், இருத்தல், தலைவணங்கல் முதலியன. இவற்றை எல்லாரும் ஒருமித்து ஒரே உடலாக கிறிஸ்துவின் மறையுடல் ஒன்றுக அனுசரிக்கவேண்டும்.

இவ்விதமாக நாம் ஒரே உடலாக, ஒரே நோக்கத்தோடு இறைவனுக்கு திருப்பலி மூலம் வழிபாடு நடத்தும்போது, வேறு தனித்த கருமங்களில் ஈடுபடுவது எவ்வாறு பொருந்தும்.

புனித 10ம், பத்திநாதர் ''........கிறீஸ்துவின் மறையுடலின் உறுப்புகளும், திருச்சபையின் மக்களுமானவர்கள் திருவழிபாட்டில் வழக்கமான பொதுநோக்கோடு மட்டும் கலந்து கொள்வது போதாது ஆனல் திருவழிபாட்டின் உண்மை உணர்ச்சியுடன் ஒரு குறித்த நோக்கத்திற்காக, பிரதான குருவுடனும் (கிறீஸ்து) அவரின் பிரதிநிதியான குருவுடனும் நெருக்கமாக ஐக்கியப்படவேண்டும்'' என்று கூறுகிறூர்.

அக்குறித்த நோக்கம் என்ன.? ''இறைவனுக்கு எல்லாப் புகழ்ச்சியும் மாட்சியும் அளிப்பது; அதன்மூலம் ஆன்மாக்கள் மீட்பைப் பலப்படுத்துவது''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# காவிய வாழ்வு

## 2. தாயும் சேயும்

யூத குலச் சிறுவர்கள் பன்னிரண்டாண்டுப் பருவத்தினரானதும் தங்கள் சமூகத்தில் சில பொறுப்புக்களை கையேற்பது வழக்காயிருந்தது யேசுவின் காலத்தில். கூடாரங்களின் திருநாள் - அறுவடைத் திருநாள் - அடிமை மீட்பின் திருநாள் என முப்பெரும் விழாக்கள் செப்பரிய முறையில் சிறப்பாகக் கொண்டாடப் பட்டன. இப் பெரும் விழாக்களில் பங்கெடுப்பதும் மேற்படிச் சிறுவர்களின் கடமைகளில் ஒன்ருகும். யேசு பன்னிரண்டாண்டை எட்டியதும் அடிமை மீட்பின் திருவிழாவில் பங்கேற்க வேண்டியிருந்ததால் இதைப் பற்றி அவர் கற்றறிதல் கடனுகும். இவ்விழாவுக்கு ஆறு திங்களுக்கு முன்பாக செபக் கூடங்களிலும் பள்ளிக் கூடங்களிலும் இதைப்பற்றி பக்தி உரைகளும் பாடங்களும் நடாத்தப்பட்டன.

எனவே, சிறப்புமிகு இத் திருவிழாவை யொட்டி ஜெருசலேம் செல்லும் மக்களின் வசதிக்காக வீதிகளைச் செப்பனிடும் வேலையில் ஈடுபட்டிருந்த வேலையாட்களைக் கண்டதும் நாமும் புனித நகருக்குப் போகப்போகிறேம் என்ற நினைவால் ஏற்பட்ட ஒருவித உணர்வால் உந்தப்பட்ட யேசு, அஞ்சியவர் போல் காணப்பட்டார். இவ் வேளையில் 'இறைவனின் இல்லமாகிய ஜெருசலேமுக்கு ஏகுவதால் நான் மிக்க மகிழ்ச்சி அடைந்தேன்; எனவே நீயும் அங்கு விரைந்து செல்' என்னும் பக்திப் பாடலைப் பாடியவாறு பக்தர்களும் அந் நகர் நோக்கிப் படையெடுக்கத் தொடங்கியிருந்தனர்.

அடிமை மீட்புத் திருநாளில் மிகவும் முக்கியமானதாகக் கருதப்பட்டது செம்மறி ஆட்டுக் குட்டியாகும் இது ஒரு புனிதமான பலிப் பொருளாகப் போற்றப் பட்டதால், இதை யாரும் இறைச்சிக் கடைக் காரனிடம் வாங்குவதில்லை. கோயிலுக்கு கொண்டுவரப்பட்ட செம்மறிக் குட்டியைக் கொன்று, அதன் குருதி கடவுளுக்குச் சொந்தமானதால் அதை அவருக்கு ஒப்புக் கொடுத்து வெற்றுடலை அதற்குரிய சொந்தக் காரனிடம் குருக்கள் கையளிப்பர். பலிப் பீடத்திற்கும், பலிப் பொருளின் சொந்தக் காரருக்குமிடையில் இருவரிசையில் நின்றிருக்கும் குருக்களில் சிலர், பலி ஆட்டின் தொண்டையைத் திருகி முறித்து, பாயும் இரத்தத்தை ஒரு தங்க வண்ணக் கலத்தில் ஊற்றுவர். இதன் பிறகு அந்த இரத்தத்தை வரிசையில் நின்று கொண்டிருக்கும் குருக்களின் மூலமாக அனுப்பி பலி பீடத்திலே பரக்கத் தெளிப்பர்.

கி. பி. 64ம் ஆண்டில் பலஸ்தீனுவை செஸ்ரியஸ் என்னும் அதிபதி ஆளும்காலை, தன் நாட்டினதும் அடிமை மீட்புத் திருநாளினதும் முக்கியத்துவத்தை ரோமை நாட்டின் கொடுங்கோலனுக விளங்கிய நீரோ என்னும் மன்னனுக்கு உறுதிப்படுத்த விழைந்தான். இதன் பொருட்டு கி. பி. 64ம் ஆண்டில் மிகச் சிறப்பாக நடந்த அடிமை மீட்புத் திருநாளில் கொல்லப்பட்ட செம்மறி ஆட்டுக் குட்டிகளின் முழுக் கணக்கையும் எடுப்பதில் மும்முரமாக இருந்தான். திருவிழாவில் திரண்டிருந்த மக்கள் தொகையைக்

**எஸ். அரியரெத்தினர்**

கணக்கெடுப்பதே இவனது உள் நோக்கமாதலால், ஓர் ஆளுக்கு பத்து ஆடுகள் வீதம் பலியிடப் பட்டிருக்க வேண்டுமென்ற முடிவுக்கு வந்தான். இக் கணக்கின்படி அவ்வாண்டில் கொல்லப்பட்ட ஆடுகளின் தொகை 256,500 ஆகும்.

இத்தனை ஆடுகளும் ஏக காலத்தில் கொல்லப்பட்டதால் அந்திவான் கோலத்தில் அலை எழுப்பி ஆலயமெங்கும் ஓர் இரத்தக் கடலன்றே பெருக் கெடுத் தோடியிருக்கும்!

இம்முறை யேசுவும் இவ் விழாவுக்குச் சென்றதினுல், இப்படியொரு அநியாயக் காட்சியைக் கண்டு மனம் பொருது, 'ஆண்டவனைத் தேடித்தான் மக்ள் இங்கு வந்தார்களே தவிர, இந்த அக்கிரமச் செயலைக் காண்பதற்கல்ல' என்று நிச்சயமாகச் சொல்லியிருப்பார்.

[5ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**காவிய வாழ்வு........**

*[4ம் பக்கத் தொடர்ச்சி]*

உலக வரலாற்றிலேயே ஆலயத்தில் அமலன் இல்லை யென்று சொல்லுமளவுக்கு, பன்னிரண்டு வயதுச் சிறுவன் ஒருவனுக்குக் கிடைத்த மிகப் பெரும் ஏமாற்றம் இதுவென்றே சொல்லலாம். இதைவிட இன்னுமொரு சம்பவம் அங்கு நிகழ்ந்தது. அடிமை மீட்புத் திருநாள் வாரத்தில் மட்டுமே யூதர்களின் நீதிமன்றம் பகிரங்கமாகக் கூடி பகிரங்கமாக விவாதங்களை நடாத்தி வந்தது. 'கோயிலில் கடவுள் இல்லை' யென்று கூறுமளவுக்கு குருக்கள் தம்மை ஏய்த்து விட்டதாக எண்ணிய யேசு, மேற்படி நீதிமன்றத்தில் மறை நூல் அறிஞர்கள் சேர்ந்து நடாத்தும் விவாதங்களிலாவது கடவுளைக் காணலாம் என்ற ஆவலால் உந்தப் பட்டு அவ்விடம் சென்றார். ஆனால், அங்கு நடந்த விவாதங்கள் சுவையற்றவையாகவும் காலத்திற்கொவ்வாதவையாகவும் காணப்பட்டன. ஏனென்றால் ஓய்வு நாளில் ஒருவர் எவ்வளவு தூரம் நடக்கலாம்; எவ்வளவு பாரத்தைச் சுமக்கலாம்; யாருக்கு விதிவிலக்களிக்கலாம்; அளிக்கக்கூடாது என்பன போன்ற தேவையற்ற விடயங்களையே அவர்கள் விவாதித்துக் கொண்டிருந்தார்கள். இவற்றையெல்லாம் உற்றுக் கேட்ட யேசு மறுபடியும் தாம் ஏமாற்றப்பட்டதாக அறிந்து 'அமலனைத் தேடி மக்கள் ஆலயத்திற்கு வந்தால், அவர்களிடம் அவசியமற்றதையெல்லாம் அளந்து கொட்டுகிறார்களே' என்று நினைத்தவராய் தமது முதல் முடிவின்படி இறைவன் இங்கே இல்லை, என்று எண்ணத் தலைப்பட்டார்.

கோயிலுக்கும் பலிபீடத்திற்கும் முதலில் சென்ற யேசு கொந்தளிக்கும் குருதி வெள்ளத்தைத் தான் அங்கு கண்டாரே தவிர குவலயத்தைப் படைத்த கோமகனைக் காணவில்லை. முறைசெய்யும் மன்றத்தில் மறைநூல் அறிஞர்கள் நடாத்திய வரண்ட விவாதங்களிலும் வல்ல தேவனைக் காணாது வருந்திய அவரின் உள்ளத்தைத் திடீரென ஓர் எண்ணம் தாக்கியது 'இவர்களை நீ தான் இறைவனிடத்தில் எடுத்துச் செல்ல வேண்டும். ஆம்! நீதான்........! இந்த எண்ணம் யேசுவின் இதயத்தில் உதயமானதும் அவர் தன் கடமையை உணர்ந்து கொண்டாரே தவிர, ஏன், எப்போது, எப்படி என்ற வினாக்களுக்குரிய விடையை அப்போது அவர் அறிந்திருக்கவில்லை. எனினும், தன்பிறப்பின் காரணத்தைப் புரிந்து கொண்ட கிறிஸ்து மக்களை, கடவுளிடம் கொண்டு செல்ல வேண்டுமென்பதற்காக அந்த மறை நூல் வல்லுனரோடு சிறிது நேரம் கோயிலில் தங்கியிருக்க விரும்பினார்.

யேசு வேத விற்பன்னரோடு விவாதத்தில் ஈடுபட்டிருக்கும் வேளை அவருடைய பெற்றார் அவரை ஆலயத்தில் தனியே விட்டுச் சென்றதிற்காக அவர்களை நான் குற்றம் சாட்டமாட்டேன். திருவிழா நிறைவெய்தியதும் தங்கள் ஊர்களுக்கு வணிகர்கள் திரும்பியபோது ஆண்களுடன் விரைந்து நடக்க முடியாத காரணத்தால் அவர்களை விட பெண்களும் சிறுபிள்ளைகளும் சிறிது தாமதித்துப் புறப்பட்டதினால் மாலை வரை இரு பகுதியாரும் சந்திக்கவில்லை. இதனால் மரியாள், யேசு வளனாரோடு செல்கிறாரென்றும், வளனாரோ யேசு மரியாளோடு வருகிறார் என்றும் எண்ணியவர்களாய் தங்கள் கூட்டத்தினரோடு நடந்து கொண்டிருந்தனர். ஆனால், அன்று மாலையில் இரு பகுதியாரும் ஒன்று கூடிய போது தான், தாங்கள் நம்பியபடி யேசு தங்களோடு வரவில்லையென அறிந்து உடனே ஜெருசலேம் விரைந்து அங்கு அவரைத் தேடினர், இறுதியாக யேசு கோயிலில் வேத அறிஞர்களுடன் வீற்றிருக்கக் கண்டு, மரியாள் பாசம் ததும்ப அவரைப் பார்த்து, 'மகனே ஏன் இப்படி நடந்துகொண்டீர்? உன் தந்தையும் நானும் உம்மைக் காணாததால் மிகவும் வருந்தி எல்லா இடமும் தேடி அலைந்தோம்' என அன்பாகச் சொன்னார். அன்னையின் வார்த்தையைக் கேட்ட மகன் 'நான் என் தந்தையின் இல்லத்தில் இருக்கவேண்டியவன் என்று உங்களுக்குத் தெரியாதா?' என்று மிகவும் பணிவோடும் பக்தியோடும் பதிலிறுத்தார்.

'தந்தையின் இல்லம்' என்று சொல்லும் போது, யேசு எவ்வளவு இதமாகவும், முழுமையாகவும் திடமாகவும், தமது வளர்ப்புத் தந்தையான வளனாரிடமிருந்து 'தந்தை' என்ற அந்த உறவை இறைவனுக்குக் கொடுக்கிறார் என்பதை இந்நிகழ்ச்சியை ஊன்றிக் கவனிப்பவர்கள் அவதானிக்கமுடியும். கிறீஸ்துவுக்கு, இதற்கப்பால் உள்ள ஒவ்வொன்றும் தெரியாவிட்டாலும், ஏதோ ஒரு வழியிலாவது இணையற்றதும் முழுமையானதுமான ஓர் உறவினால் இறைவனோடு இணைக்கப்பட்டிருந்தார் என்பதற்கு இதைவிட வேறு சான்றும் வேண்டுவதோ....?

உலகத்தின் மீட்பராக உதித்த அவருடைய வாழ்க்கைப் பயணத்தில் இன்னும் எவ்வளவோ தூரத்தைக் கடக்கவும், அறியவும்

*[10ம் பக்கம் பார்க்கவும்]*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## ஜெயம் அளிக்கும்

# மன்னிப்பு (4)

### தொடர் கதை

★

நாட்கள் செல்லச் செல்ல ஏதோ கவலையால் பிடிக்கப்பட்டவன்போல வாடியிருந்தேன். இது எனக்கே பெரிய ஆச்சரியமாக இருந்தது. யார் யாரை மணமுடித்தால்த் தான் நமக்கென்ன என்றிருக்கவும் முடியவில்லை. இது பற்றி உண்மையை நண்பனிடம் கேட்டறியவும் துணிவில்லை. இது பொய்வதந்தியாக இருந்நால், அவன் மனம் என்ன பாடுபடும். ''நீயே இப்படி நினைக்கலாமா? என்று கேட்டால், எந்த முகத்துடன் பதில் சொல்வது. பாலிய நண்பன், புகலிடம் அளித்தவன். அவனிடமே கேட்கத் துணிவு வரவில்லை. எனது அன்றாடக் கடமைகள் சில இதனுல் ஸ்தம்பிதமடைந்தபோது, இனிமேலும் இதை மனதில் வைத்திருந்தால் பைத்தியம் பிடித்துவிடுமென்றுகிவிட்டது. மற்றவர் மூலம் உண்மையை அறியவும் முடியவில்லை. அவனிடமே கேட்டுவிடுவது, நண்பன்தானே தப்பாக இருந்தால் மன்னிப்புக் கேட்டுவிடுவது, என்று துணிவை வரவழைத்துக் கொண்டு, கேட்டுவிட்டேன். அவனே வழக்கமான புன்னகையுடன் ''உனக்கு யார் சொன்னது''? என்றுன். ''யாரும் சொல்லவில்லை ஊரில் கதைக்கிறுர்கள்'' என்றேன். என்னிடம் மறைத்தாலும், நான் எப்படியும் இதை அறிந்துவிடுவேன்; அதற்கு முன் தானுக இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன் படுத்த வேண்டுமென்று ''உண்மைதான், ஆனுல்....'' என்று நிறுத்தினுன். ''ஆனுல்....? என்று நான் தொடர்ந்தேன். ''ஆனுல் வீட்டிற்கு இது இப்போது தெரியக்கூடாது. பெற்றோர்கள் இதற்குச் சம்பதிக்கவே மாட்டார்கள். கலியானத்தை முடித்துவிட்டால், எப்படியும் அவர்களைச் சரிக்கட்டிவிடலாம். அதுவரை நீ இதைத் தெரிவுக்காமலிருக்க வேண்டும். இதை உன்னிடம் சொல்ல வேண்டுமென்றிருந்தேன். இன்றுதான் சந்தர்ப்பம் வந்தது இதற்கு நீ எனக்கு உதவிசெய்ய வேண்டும்'' என்று வேண்டினுன். என்னுல் வியப்பைத் தாங்கமுடியாமல் ''சமயம் இடம் கொடுக்குமா?'' என்றேன். என் நெஞ்சிலிருந்தது வாயில் வந்தது. ''கிராமத்தவர்கள் இலகுவில் மதம்மாறச் சம்மதிக்கமாட்டார்கள். அவளை நம்முடையவளாக்கிவிட்டுத் தான் படிப் படியாக நமது மதத்துக்குக் கொண்டுவரவேண்டும்'' என்றுன் தீர்க்கமாக எனக்கு இன்னும் நம்பிக்கை வரவில்லை. அதை வெளிக்காட்டிக்கொள்ளாமல் எனது கடைசி முயற்சியையும் பிரயோகித்து இதை தடைசெய்ய எண்ணி, ''கண்மணி இந்தக் கலியாணத்துக்குச் சம்மதிக்கிறுளா?'' என்று கேட்டபொழுது, என் முகத்தை நிமிர்ந்து பார்க்காமலே ''அவளை நான் அறிவேன்'' என்று கூறினுன். நாமொன்று நினைக்க, இன்னுமொன்று நடப்பதும், நன்மை செய்யத் தீமை விளைவதும் இன்றைய உலகில் சாதாரணம். சுண்டங்காய் என்று எண்ணிய விஷயம் சுரக்காயாக இருக்குமென நினைக்கவில்லை. அவனுடைய பதில் என்னைக் கலக்கிவிட்டது. எதையோ இழந்துவிட்ட உணர்ச்சி எனக்கு ஏற்பட்டது. இந்த விஷயத்தைக் கேட்டு தெளிவடையலாமென்றுல், அது இன்னெரு மாதிரி என்னைக் கலக்குகிறது நான் உண்மையான நண்பனுனுல் இதையிட்டு மகிழ்ச்சியடையவேண்டும். அவனது இல்லறம் தழைக்க இறைவனைப் பிராத்திக்கவேண்டும். அதை விட்டு ஏன் என்மனம் இப்படிப் புலம்புகிறது. இதை நடைபெற வொட்டாமல் செய்ய நினைக்கிறதே. எல்லாம் நடந்து முடிந்தபிறகுதான் என் மனம் அன்று அடித்துக்கொண்டகாரணம் தெளிவாயிற்று.

இந்த மனநிலையை மாற்ற பல நல்ல நூல்களைப் படித்தேன் தினப்பூசைக்குப் போய் மனதை ஒருநிலைப்படுத்தி இறைவனைத் தியானித்தேன். தனிமையிலிருப்பதைத் தவிர்த்து நண்பர்களுடன் பொழுது போக்கினேன். இப்படியாகச் சில நாட்கள் முயற்சித்து மீண்டும் பழைய நிலையை அடைந்தேன். சின்னத்தம்பியார் எட்வேட் எப்படியானவன் என்று அவன் குணுதிசயங்களைக் ஒரு முறை கேட்டபோது, மீண்டும் எனக்கு ஒரு மோதல் ஏற்பட்டது. இதை வெளிக் காட்டாமல் அவரிடம் பேசினேன். என் நண்பனையிட்டு குறைசொல்ல ஏதுமில்லை. மறு பக்கம் என் மன ஓலம் நடைபெறக்கூடாது என்று ஒலித்தது. ஏதோ பட்டும் படாமலும் ''என்னைப் பொறுத்தளவில் நல்லவன்'' என்றேன். அவர் கலியாணச் செய்தியை வெளியிட்டார். கண்மணி சம்மதித்தாளா? என்ற சந்தேகம் இன்னும் தீரவில்லை. எனவேதான் அவரிடம் கேட்டேன். ''அவள் குழந்தை, வெளியில் சொல்லுவாளா, மனத்தளவில் சம்மதந்தான்'' என்றுர். அவள்

[7ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**மன்னிப்பு........**

[6ம் பக்கத் தொடர்ச்சி]

சம்மதிக்காவிடினும் இவர் சம்மதிக்க வைத்து விடுவார் போலிருந்தது. எனக்கு இந்தப் பதில் அவ்வளவு திருப்தி அளிக்கவில்லை. அப்படியானல் ''சமயம் ஒன்றிருக்கிறதே'' என்று மீண்டும் கேட்டேன். ''தன் தன் சமயத்தில் செய்வதற்கு அவர் ஒப்புக்கொள்கிருர். நானும் என்ன செய்ய மாஸ்டர் எல்லாம் சரியாக வரும்போது இதைமட்டும் பெரிது படுத்தலாமா '? என்ருர். ஆம் தங்கள் சமயத்தை பெரிது படுத்தாமல், கலியாணம் நிட்சயிக்கும் பெற்ருேர் நமது நாட்டில் எத்தனை பேர்! அவர்களும் ஆதனம், சீதனம் என்று பெரிது படுத்துவார்கள். சமயத்தைப் பெரிதுபடுத்துவார்களா? இல்லை.''குமர் காரியம் எல்லாம் ஒருமாதிரியா வரக்குள்ள இது ஒரு காரியமாக எடுக்கலாமா?'' என்று சமயத்தைப் பொருட்படுத்தாத மனிதர்கள் எத்தனைபேர்! நான் பெரிய மனிதன். பணக்காரன் நாலுபேரும் என்னை மதிக்கும்படியாக வாழவேண்டும். என் மகள் அவனை விரும்பினுள் என்று பணத்துக்கும், பகட்டுக்கும் சமயத்தை பெருட்படுத்தாத பெரிய மனிதர்கள் எத்தனையோ பேரிருக்கும்பொழுது, இந்த கிராமவாசி சொல்வதில் வியப்பில்லைத் தான். மேலும் அவ்விடத்தில் இருக்கவிரும்பாமல் 'முடிந்தது முற்றும்' என்ற வசனத்தைக் கூறிக்கொண்டு அவரிடம் விடைபெற்றேன்.

கோடை விடுமுறையில் வீட்டுக்குவந்தது பல பிரச்சினைகளிலிருந்து எனக்கு விடுதலை அளித்ததுபோலிருந்தது. மேலும் அந்த மாற்றமும் எனக்கு நிம்மதியளித்தது. புயலுக்கு முன் ஏற்படும் பயங்கர அமைதிதான் அது என அன்று நான் நினைக்கவில்லை. நான் விடுமுறையில் வீட்டுக்கு வரும்பொழுது ''வா போவோம்'' என்று எனது நண்பனைக் கடமைக்கழைத்தேன். ''எனக்கு லீவு இல்லை. வேலையும் அதிகமாக இருக்கிறது'' என்ருன். அன்று அவன் அதிக வேலை என்று சொன்னது அவனைப் பொருத்தளவில் உண்மைதான் கலியாணம் முடிப்பதும் வேலைதானே! அதுவும் நான் திரும்பி வருவதற்குள் முடித்து விட்டான். மூன்று கிழமைக்குள் மிக வெற்றிகரமாகத் திட்டம்போட்டு முடித்துவிட்டான். இதையிட்டுப் பலர் பல காரணங்கூறிய போதிலும், எனக்கு சம்பந்தப்பட்டவர்களின் மனநிலை விளங்கும். எனவே மீண்டும் எனக்குத் தடுமாற்றமோ, வியப்போ ஏற்படவில்லை.

கண்மணி சின்னம்மாவின் கெடுபிடிகளால் கஷ்டப்பட்டாலும், அதை அவள் வெளிக்காட்டுவதில்லை. இதை தனியே அனுபவித்து வந்ததால், இந்தக் கலியாண மூலம் அவளுக்கு விடுதலை வருவது சந்தோஷமாக இருந்தது. நன்மையோ தீமையோ தற்போதயத் துன்பத்திலிருந்து விடுதலை. இதனுல் தான் எதையுமே சிந்தியாது சம்மதித்தாள். அவள் அதலபாதாளத்தில் தலைகுப்புற விழுவதை உணரவில்லை. சின்னத்தம்பியாருக்கோ வலிய வந்த சீதேவியைக் காலால் தள்ள மனமில்லை. கால் சட்டை போட்ட மாப்பிள்ளை, அதிலும் அரசாங்கத்தில் உத்தியோகம் பார்ப்பவன் மருமகனுகக் கிடைத்தது, பெரிய புதையல் கிடைத்ததுபோல இருந்தது. இந்த மோகம் அவர் கண்ணை மறைத்ததினுல், அவன் சொன்னதற்கெல்லாம் தலையாட்டினுர். தன் செல்வ மகள் சகல சௌபாக்கியங்களுடன் வாழவேண்டும் என்ற எண்ணத்தில் சகல காரியங்களையும் செய்து வந்தார். தன் மகளுக்குத் தானே குழிபறிப்பதை அவர் அப்போது காணவில்லை. இவர்கள் எல்லோரையும்விட இன்னெருவருக்கு இந்தக் கலியானத்தில் முக்கிய பங்குண்டு. அந்தப் புண்ணியாத்மாவின் தூண்டுதல்தான் இந்தக் கலியாணத்தை நடத்திவைத்தது என்று சொல்லலாம். ''உடன்பிறந்தார் சுற்றத்தார் என்றிருக்கவேண்டாம், உடன் பிறந்தே கொல்லும் நோய்.'' கண்மணியின் சின்னம்மாவுக்கும் இப்படியொரு உடன் பிறந்த நோய் ஒன்று இருக்கத்தான் செய்தது. அந்த நோய் கண்மணியை தன்னிஷ்டப்படி சித்திரவதை செய்ததுமின்றி, அவளை அழிக்க ஒரு நல்ல சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்தது. சக்களத்தி மகள் என்ற அருவருப்பான எண்ணமே இப்படி நாளடைவில் நோயாக மாறியது. ஆஸ்மா நோயுள்ளவர்களுக்கு அநேகமாகக் குளிர்காலத்தில் அந்த நோய் உக்கிரமாவதுபோல, சந்தர்ப்பத்தை எதிர்ப்பார்த்திருந்த சின்னம்மாவுக்கும், உடன் பிறந்த பொருமை நோய் கல்யாணம் என்றவுடன் புருஷனிடம் தூபம் போடவைத்தது. இவையெல்லாம் ஒருபேதைப்பெண்ணின் வாழ்வை கெடுத்துவிட்டன.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# விவிலியத்தைப் படிப்போம்

## (2) விளக்குபவர் யாரோ?

சென்ற இதழிலே விவிலிய நூல் இறைவன் எமக்களித்த அரியதொரு புனித ஏடு என நாம் படித்தோம். மேலும், அதன் இரு பெரும் பிரிவுகளான பழைய ஏற்பாடு புதிய ஏற்பாடும் எமது மீட்பின் சரிதையை எடுத்தியம்புகின்றன என்றும் கற்றோம். ஆனால், இவைகளினிடையே பின்னிக் கிடக்கும் நற்செய்தியினை நாம் தெளிவாக உணர்ந்து கொள்ளுதல் சுலபமான செயலன்று.

விவிலிய நூலின் நடையோ புரியாத ஒரு புதிராயிருக்கின்றது. அதனிடையே காணப்படும் கருத்துக்களிற் சில புதுமையிலும் புதுமையாகத் தோற்றமளிக்கின்றன. விஞ்ஞான அறிவிற்கு முற்றுமே ஒவ்வாத கருத்துகளும், அறநெறி வாழ்விற்கு அடியோடு பொருந்தாத செய்திகளும் அங்கு காட்சியளிப்பனவாய்த் தோன்றுகின்றன. எனவே சரித்திர காலத்திற்கு அப்பாற்பட்ட சரிதையிலே புதைந்து கிடக்கும் செய்தியினைப் புரிந்து கொள்ளும் முறைகளைப்பற்றி நாம் சற்றுச் சிந்திக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

விவிலியம் ஓர் இரு மாதங்களுள், அல்லது வருடங்களுள் ஒரு சில ஆசிரியர்களால் எழுதப்பட்ட ஒரு நூலன்று. மாறாக, பல நூற்றாண்டுகளாய் பரம்பரைச் செய்தியாய்ப் பரிமாறப்பட்டு, ஈற்றிலே இறைவனின் ஏவுதலால், சிறுசிறு பகுதிகளாய் மனித வரலாற்றிலே, இறைவன் ஆற்றிய செய்திகளாய் இடம் பெற்று, எழுத்துருப் பெற்ற ஓர் புனித ஏடு. மேலும் இவ்வேட்டினை இறைவன் எமக்களித்த காலமும், நாம் வாழும் காலமும் எவ்வளவோ மாறுபட்டனவாயும் உள்ளன.

இதனிடையே நாம் காணக்கூடிய சில செய்திச் சாரங்கள்:—

- அன்பே உருவான இறைவன் தமது அன்பின் ஆழத்தை எமக்கறிவித்து, அதனில் பங்குபெற மனிதனை அழைக்கும் செய்தி.
- தீமையின் கொடுமையைச் சித்திரித்து காட்டும் செய்தி.
- நல்லோர், தீயோர் ஆகிய அனைவரையும் வாழ்வெனும் மேடையிலேற்றி, அவர்கள் மூலமாய் மனித வாழ்வினைப் படம் போல் சித்திரித்துக் காட்டும் செய்தி.
- பாவத்தையும், அதன் அகோர விளைவுகளையும் மண்ணக மாந்தர்க்கு எடுத்துரைக்கும் செய்தி.
- வாழ்க்கைப் பாதையில் வெற்றியடைவோர், வானையும் படைத்த வள்ளலாம் இறைவனுக்கு அளிக்கவேண்டிய நன்றிகளையும் புகழினையும் பாருலகிற்குப் பறைசாற்றும் செய்தி.
- துன்பத்திலே துவண்டு மனமுடைந்த மாந்தர்க்கு ஆறுதல் அளிக்கும் மருந்தினைக் காட்டும் செய்தி.
- மரணத்துடன் மனித வாழ்வும் முடிந்து விடுகின்றதென்று மனம் வருந்துவோருக்கு மரணத்தின் பின்னும் மனிதனுக்கொரு வாழ்க்கை இருக்கின்றதென்றும், அதற்கு முடிவே கிடையாதென்றும் எடுத்தியம்பும் நற்செய்தி.

இவைகளை நாம் கசடறக் கற்று, கண்ணியமாய் வாழவேண்டுமாயின், இக் கருத்துக்களைத் தெளிவாய் விளக்கிக் கூற எமக்கு ஒரு துணைக்கருவி தேவை. அதுதான் இறைவனே நிறுவிய அரிய சாதனம் திருச்சபையாகும்.

திருச்சபைதான் இறைவன் இவ்வேட்டில் எம்முடன் பேசுகிறார் என்றும், அவர் எமக்கு எதனை அறிவுறுத்துகிறார் என்றும் எடுத்தியம்புகின்றது. திருச்சபைதான் திருமறை நூலாகிய விவிலியத்திற்கு விளக்கமளிக்கின்றது.

ஏட்டை அளித்த இறைவனே திருச்சபையையும் ஏற்படுத்தினார். எனவே நாம் விவிலிய நூலை வாசிக்கும் பொழுது திருச்சபையின் கண்கொண்டே வாசிக்க வேண்டும்.

திருமறை நூலும் திருச்சபையும், பிரிக்க முடியாதவாறு பிணைக்கப்பட்டுள்ளன. திருமறை நூலில் திருச்சபையும் திருச்சபையிலே திருமறை நூலும் இருப்பதை நாம் மனதில் வைத்துக் கொள்ளல் வேண்டும். ★

**அருட்திரு. K. சுவாமிநாதன் அடிகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பெற்ருேர் மன்றம்

## கத்தோலிக்க திருமணத்தின் மாண்பு.

"வரம்புயர நீர் உயரும், நீர் உயர நெல் உயரும், நெல் உயர குடி உயரும், குடி உயர கோல் உயரும்."

ஒரு நாட்டின் வளர்ச்சிக்குப் புலவன் வரம்பின் தரத்தை, அதன் பலத்தை அடித்தளமாக எண்ணினுனே, அதேயளவில் கட்டிடக் கலைஞன், எம்மைச் சூழ்ந்திருக்கும் அழகுறு மாடிவீடுகளின் பலத்திற்கு அதனை உண்டாக்கியிருக்கும் கற்களைக்கூறுவான். ஒரு வைத்தியன், எமது உடலில் சுகத்திற்கும். அழகிற்கு எமது உடலை ஒன்றுசேர்த்திருக்கும் அணுக்களின் தரத்தைக் கூறுவான். சமூகம் என்றது ஆகாயத்தின் விண்வெளியில் திரியும் சட்லைட்டுகள் அல்ல. குடும்பங்களால் ஒன்று சேர்க்கப்பட்டுள்ள ஒரு மனித கூட்டம். பலரும் ஒன்று சேர்ந்து தங்கள் கூட்டத்தின் பொதுநல தேவைகளை ஒற்றுமையாக அடைய திட்டமிட்டுள்ள ஒரு குழு "குடும்பம்" திருமணம் என்னும் ஒரு செடியில் மலர்ந்த மலர். அதன் அழகும் தரமும் செடியினைச் சரிவரக் கவனிப்பதில் தங்கியிருக்கிறது. அத்துடன் புயற்காற்று புழுதிபோன்றவை அதன் எழிலுறு இதழ்களைக் கெடுத்துவிடாது இருக்க வேண்டும்.

குடும்பத்தின் உயர்வு அதனைத்தரும் திருமணத்தின் சிறப்பில் தங்கியிருக்கின்றது. அதன் தரம் திருமணத்திற்கு எவ்வளவு சிரத்தையுடன் சமூகம் தன் மக்களைத் தயாராக்குகின்றது என்பதில் தங்கியிருக்கின்றது. "தனி மனிதனுடையவும், மனித சமூதாயத்தினுடையவும் கிறீஸ்தவ சமூதாயத்தினுடையவும், நல்வாழ்வு, திருமண, குடும்ப சமூகத்தின் நன்னிலைமையோடு நெருங்கிய தொடர்புகொண்டுள்ளது. ஆனுல் இந்தத் திருமணத்தின் மாண்பு எல்லா இடங்களிலும் அதே ஒளியுடன் துலங்குகிறதில்லை. ஏனெனில் பலதாரப்பழக்கம், மணமுறிவு என்னும் நோய், சுதந்திரக்காதல் வாழ்வு, பிற சீர்கேடுகள் ஆகியவற்ருல் அதன் மாண்பு மங்கியுள்ளது. இதற்குமேலாகத் தன்னலம், இன்ப வெறி, இன்னும் மக்கட் பேறுக்கு எதிரான தகாத பழக்கங்கள் போன்றவற்ருல் அடிக்கடி திருமண அன்பு இழிவுபடுத்தப்படுகின்றது.

மேலும், இன்றைய பொருளாதார, சமூக உளவியல், குடியுரிமைச் சூழ்நிலைகள் குடும்பத்தில் குழப்பங்களைக்கொண்டுவருகின்றன. விசேடமாக, உலகின் சில பகுதிகளில் பெருகிவரும் மக்கள் தொகையிலிருந்து எழும் பிரச்சினைகள் கவலை தருகின்றன. இன்றைய சமுதாயத்திலிருந்து எழும் ஆழ்ந்த மனத் தாங்கல்களிலிருந்து பல இடர்கள் தோன்றிடினும், அவை இந்நிறுவனத்தின் உண்மையான இயல்பைப் பல வழிகளில் காட்டுகின்றன.

எனவே, முதலில் நம்நாட்டில், நம்மேற்றிராசனத்தில் நல்ல திருமணத்திற்குத் தடையாயிருக்கும் சீர்கேடுகள், பழக்க வழக்கங்களைப்பார்த்து, ஒரு நல்ல குடும்பத்தை உருவாக்கமுடியாமல் தடைசெய்யும் சூழ்நிலைகள் குழப்பங்களை ஆராய்வோம் பின்னர் வத்

★ "திரு" ★

திக்கான் தரும் திருமணத்தைப்பற்றிய, குடும்பத்தைப்பற்றிய நல்லறிவை, அது வகுக்கும் பாதைகளை அறிவோம் இறுதியில் நாம் இம் மேற்றிராசனத்தின், இந்நாட்டின் மக்கள் என்ற முறையில், என்ன செய்யமுடியும். என்று பார்ப்போம். செயல் திட்டங்களை வகுப்போம்.

திருமணம் என்றதும் இன்று எம் கண் முன்வருவது காதல் திருமணம், அல்லது பெற்ருேர்களால் ஒழுங்குசெய்யப்படும் திருமணம், இவை இரண்டும் நம் நாட்டில் தற்பொழுது, அரைக்கரைவாசிக்கு இருக்கின்றது. இவை இரண்டிலும் எது நல்லது, எது நீடிக்கக்கூடியது, என்பதல்ல எனது தர்க்கம். இவை இரண்டிலும் நன்மை தீமைகளுண்டு.

பெற்ருேர்களால் ஒழுங்கு செய்யப்படும் திருமணங்கள், படிப்பறிவில் முன்னேறியுள்ள பகுதிகளிலும் நடைபெறுவதைக் காணுகின்ருேம். இச்சூழ்நிலைகளில், திருமணத்தின் உண்யைான மாண்பு மறைக்கப்பட்டு, சமூக ஊழல்கள் பல புகுத்தப்படு

[10ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பெற்றோர் மன்றம்....

[9ம் பக்கத் தொடர்ச்சி]

கின்றன. அவற்றில் பிரதானமானவை, சாதி வேற்றுமை, நினைக்கமுடியாத சீதனவேட்டை, தக்க சீதனம் கொடுக்கமுடியாமல், தாம்பெற்ற பெண் செல்வங்களை வைத்திருக்கும் பெற்றோரின் அழுகைக் கண்ணீரைத் தினமும் காண்கின்றோம். சீதனம் கூடாது என்பது என் கருத்தல்ல. எங்கெங்கு வசதியும் வளமும் இருக்கின்றதோ, தம்பிள்ளைகளுடைய வாழ்வின் செழிப்பிற்கு உதவ பெற்றோர்களால் முடியுமோ, அங்கு அது வரவேற்கத்தக்கது. படிப்பிலும் பதவியிலும் உயர்ந்துவிட்டால். சீதனத்தொகையும் உயர்ந்துவிடுகின்றது, கள்ள வியாபாரப் பொருட்கள் மாதிரி. ஆகவே! மணமகன் விலைமகனாக மாறுகின்றான்; திருமணம் கடைச்சரக்காக மாறுகின்றதேயன்றி, கடவுளால் ஏற்படுத்தப்பட்ட இருவருடைய சொந்த சம்மதத்தால், இரு உள்ளங்களில் உண்மைக் காதல் ஒன்றிப்பால் உருவாகவேண்டும் என்ற உண்மை மறக்கப் படுகின்றது. செல்வச் செருக்குப்பிடித்த பல பெற்றோர்களிடையே தோன்றும் சமூகத்தைக் கெடுக்கும் இன்னொரு பூதம் ''சாதிவேற்றுமை'' இது பழமையில் திளைத்திருக்கும் பெற்றோர்கள், தங்கள் இளம் பிள்ளைகளின் அன்புப் பிணைப்பைக் கெடுக்க உபயோகிக்கும் ஒரு பூச்சாண்டி. இத்தகைய சீர்கேடுகளை படிப்பறிவுள்ள, தினமும் நன்மை வாங்கும் கத்தோலிக்கரிடையேகூடக் காண்கின்றோம்.

கிறீஸ்துவிற்கு முன்புகூட எமது தமிழ்ப் பண்பாட்டில், இருசாதியினர்தான் இருந்தனர். அவை கொடுப்பவன், பிறருக்கு வழங்குபவன். கொடைவள்ளல், கடவுளையொத்தவன் — அவன் நல்ல சாதி, கொடாதவன், வயிரி — கீழ்சாதி.

''சாதி இரண்டொழிய வேறில்லைச்
சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையில் —
மேதினியில்
இட்டார் பெரியோர் இடாதார் இழி
குலத்தோர்
பட்டாங்கிலுள்ளபடி.''

கடவுள் மனிதனைத்தான் உண்டாக்கினார், அவனுடைய மனித உணர்ச்சிகளோடு உயர்ந்தவன் தாழ்ந்தவனுமல்ல, கீழ்சாதி மேல்சாதியாகவுமல்ல. மனிதன் தன் சுயநல எண்ணங்களுக்காக சுகபோகத்திற்காகத், தன்னை உயர்த்தி, மற்றவனைத் தாழ்த்தி அடிமையாக்கி, அழைத்ததின் விளைவுதான் இது. அதுவும் தான் தப்பித்து, தன் குற்றத்தைக் கடவுள் தலையில் போட்டு, மறை என்னும் திரைச் சீலையால் மறைத்துப், புனிதப்படுத்திய ஒரு நடைமுறைதான் சாதி வேற்றுமை உண்மைச் சைவ சமயத்தில்கூட இதனைக் காணமுடியாது ''இப்படிப்பட்ட ஊழல்கள், துர்நாற்றம் வீசும் சாக்கடைகள், இழிவு மனப்பான்மைகள், எமது எண்ணங்களிலிருந்து, குறிப்பாக எமது இதயங்களிலிருந்து அகலவேண்டும். அப்போதுதான், புனிதமான திருமணத்தின்மூலம் நல்ல குடும்பங்களை, உருவாக்கமுடியும். எமது இதயக் கதவுகளைத் திறந்துவிடவேண்டும். எமது இதயங்கள் தூய்மையடையவேண்டும். அப்போது தான் உண்மையான கிறீஸ்துவைக் காணமுடியும். இதயக்கோயிலிலே இறைவன் வாசஞ் செய்வார். கிறீஸ்துவின்இரத்தந்தான் எல்லோரையும் இரட்சித்தது. அவரது உடல்தான் எல்லோரையும் வளர்த்தது, ஒருமனித தெய்வீக சமூகம் எனும் கடவுள் மக்களை உருவாக்குகின்றது, எனக் கருதும் கிறீஸ்துவின் வழிச்சுவடிகளுக்கு இது எப்படிப் பொருந்தும்.

(வளரும்)

காவிய வாழ்வு........

[5ம் பக்கத் தொடர்ச்சி]

வேண்டியிருந்தது. எனவே அவர் திரும்பவும் ஏடும் கையுமாக பள்ளிக்கூடம் ஏகினார்: தந்தையோடு சேர்ந்து தச்சுத் தொழில் செய்கிறார். பெற்றோருக்குக் கீழ்ப்படிந்து பேரன்போடு பணிபுரிகிறார். வழக்கப்படி வீட்டில் சாதாரண வேலைகளில் ஈடுபடும் அவர், தமது 'மறைந்த கால' வாழ்வை மகிழ்வோடு தொடங்கினார். ஆம்! மிக நீண்ட காலத்திற்கு இவ்வித வாழ்க்கையோடு கலந்து விடுகிறார் யேசு.

நாட்கள் திங்கள்களாகவும் — திங்கள்கள் ஆண்டுகளாகவும் ஓடி மறைகின்றன. கிறீஸ்துவும் 30 வயது இளைஞனாகத் தோன்றுகிறார். எத்துணை இளமை! எத்துணை அழகு....! அப்போது திருமுழுக்கு அருளப்பரின் குரல் வழியாக அந்த அழைப்பு வருகிறது. அழைப்பு அவருக்குத்தான்! அது அவருடைய பொது வாழ்வில் கோபுரத்துக் கலசமாக விளங்கி ஒளி தள்ளப்போகிறது.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# திருமறை அறிவு மன்றம்

## லூக்காஸ் சுவிசேசத்தின் சிறப்பியல்புகள்.

**I. இரக்கத்தின், மன்னிப்பின் சுவிசேசம்:**

ஒவ்வொரு சுவிசேசத்திலும், சுவிசேசகர்கள், கிறீஸ்துவைத் தத்தம் சிறப்பியல்புகளுடன் சித்தரித்திருக்கிறார்கள். கிறீஸ்துவை மானிடரின் இரட்சகர் (Saviour) என்ற கோதாவில் படம் பிடித்துக்காட்டுகிறார் லூக்காஸ். கிறீஸ்துவிக்கு, இயேசு என்னும் நாமம் கொடுக்கப்பட்டதில் விசேச கவனம் செலுத்தியுள்ளார் லூக்காஸ் சுவிசேசகர். (2,21) இயேசுகிறீஸ்து என்றழைக்கப்படும் இந்த இரட்சகர், இரக்கமும், மன்னிப்பும், தயாள குணமும் உருவானவர். லூக்காஸ் சுவிசேசம் 15ம் அதிகாரத்தில் வரும் மூன்று உவமைகளால், கிறீஸ்து, இரக்கமும், மன்னிப்பும், தயாள குணமும் உள்ளவர் என்பதை, லூக்காஸ் சுவிசேசகர் கூறுமல் எடுத்துக் கூறுகின்றார். காணுமற் போன ஆடு (15,4-7) காணுமற்போன காசு (15,8-10) ஊதாரிப்பிள்ளை (15,11-32). "பட்டணத்துப்பாவி"யின் (7,36-50) வரலாற்றினால், கிறீஸ்துநாதர் ஒரு பாரிய படிப்பினையைப் படிப்பித்தார் என்பதை, லூக்காஸ் படம் பிடித்துக் காட்டுகிறார். நல்ல கள்ளனைப்பற்றிப் பேசுகின்றார் (23,43) "தந்தையே இவர்களை மன்னியும், ஏனெனில் தாங்கள் செய்கிறது, இன்னதென்று அவர்களுக்குத் தெரியவில்லை." (23,34) என்று கூறுகின்றார்.

**II. பெண்களுக்கு முக்கியத்துவம்:**

லூக்காஸ் வசித்த காலத்தில், பெண்வர்க்கத்தினர் மிகவும் பின்தங்கிய நிலையிலிருந்தனர். இப்படியிருந்தும்கூட, லூக்காஸ் தம் சுவிசேசத்தில், பல புனித ஸ்திரிகளைப் பற்றிப் பற்பல இடங்களில் பேசியிருக்கின்றார். உதாரணமாக: ஸ்நாபக அருளப்பரின் தாய் எலிசபேத்தம்மாள் (1, 39-58), அன்னாள் என்றழைக்கப்படும் தீர்க்கதரிசி (2, 36-38), நயீன் நகரின் கைம்பெண், (7, 11-17), மனந்திரும்பிய பாவிப் பெண் (7, 36-50), கிறீஸ்துவின் பகிரங்க திருப்பணியின்போது உடன்சென்ற கலிலேயப் பெண்கள், மார்த்தாளும் மரியாளும் (10,38-42) கல்வாரிக்குப் போகும் சமயத்தில் கிறீஸ்துவைச் சந்திக்கும் ஜெருசலேம் பட்டணத்தின் ஸ்திரிகள் (23,27-31) ஆகிய இவர்களைப்பற்றிப் பேசியுள்ளார். மேலும், கிறீஸ்துவின் பிறப்பையும், வளர்ப்பையும் முன்னிட்டு, தேவதாயைப்பற்றியும் நன்கு விளக்கியுள்ளார்.

**III. பரிசுத்த ஆவி:**

மெசியா என்றழைக்கப்படும் இயேசு, பரிசுத்த ஆவியைத் தாங்கியிருக்கிறார் என்பது, லூக்காஸ் எண்ணம். எனவே, பரிசுத்த ஆவியைப் பற்றி அதிகம் பேசுகின்றார். கிறீஸ்துவின் ஞானஸ்நான நேரத்திலும், கிறீஸ்துவின் சோதனையின் பொழுதும், பரிசுத்த ஆவியை நாம் சந்திக்க வைக்கிறார். முதன்முதலாக, கிறீஸ்து இரட்சணிய அலுவலை ஆரம்பிக்குமுன் கூறுயவை, இசையாய் இறைவாக்கினரின் இறை வார்த்தைகள்: "ஆண்டவருடைய ஆவி என் மேலே, ஏனெனில் என்னை அபிசேகம் செய்துள்ளார். எளியோர்க்கு நற்செய்தி சொல்லவும், சிறைப்பட்டோர் விடுதலையடைவர். குருடர் பார்வை பெறுவர் என அறிவிக்கவும், ஒடுக்கப்பட்டோர்க்கு உரிமை வாழ்வு வழங்கவும் ஆண்டவர் அருள்தரும் ஆண்டினை அறிவிக்கவும், அவர் என்னை அனுப்பினார்." (4,18) "பரிசுத்த ஆவி உம்மீது வருவார். உன்னதரின் வல்லமை உம்மேல் நிழலிடும்........" (1,35). பரிசுத்த ஆவியின் அலுவலைப் பற்றி அதிகம் பேசுகிறாரே தவிர லூக்காஸ் பரிசுத்த ஆவியை ஒரு ஆளாகக் கூறியதாகத் தோன்றவில்லை.

**அருள் திரு. R S. லோப்பு அடிகள்.**

**IV. செபம்:**

லூக்காஸ் சுவிசேசம், செபத்தின் சுவிசேசம் என்று அழைக்கப்படுவது மிகப் பொருத்தமானது. எல்லாவற்றிற்கும் மேலாக கிறீஸ்துநாதர் தாமே, அதி உன்னத செபத்தைப் படிப்பித்தருளினார். இதை, லூக்காஸ்

[13ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இளைஞர் இல்லம்

தம்பிக்குக் கடிதம்:— 2.

புனித சூசையப்பர் கல்லூரி,
திருகோணமலை.
20-6-70.

அன்புத்தம்பி அமலனுக்கு;

நலம், நலம் மலர்க! உன் கடிதம் கிடைத்தது. இவ்வளவு விரைவாகப் பதில் எழுதுவாய் எனக் கனவிலும் நான் கருதவில்லை. வீட்டில் அனைவரும் கடிதத்தை வாசித்துப் பார்த்து மகிழ்ந்தனர் என்றும், தங்கை நிர்மலாவோ தன்னைப்பற்றி அண்ணர் ஒருவரி கூடக் குறிப்பிடவில்லையே எனக்கோபித்துக் கொண்டாள் என்றும் குறிப்பிட்டுள்ளாய் .... அவளின் செய்கையை வாசித்த பொழுது எனக்குச் சிரிப்புத்தான் வந்தது .... .... .... பரவாயில்லை. அவள் சிறுமிதானே. எனது இலக்கண ஆசிரியர் அடிக்கடி உதாரணம் கூறுவார். நஞ்சுண்டான் சாவான் என்றால் சஞ்சுண்டவளும் சாவாள் அதற்கெனத் தனி விதி வேண்டுவதில்லை என்று அதுபோல் நீ அப்போஸ்தலனாக விளங்க வேண்டும் என்றால்.... அவளும் அப்படியே விளங்கவேண்டுமென்பதே அண்ணாவின் ஆசை எனக்கூறிவை. சிறுபிள்ளைதானே, தருணம் வரும் பொழுது எழுதுவதாகக் கூறு.

அண்ணா, உங்கள் கடிதத்தை வாசித்த பொழுதுதான் உண்மையில் பலர் கிறிஸ்தவனாகப் பிறந்ததையிட்டுப் பெருமையும் — பெருமிதமும் அடைவதாகப் பேசிக் கொண்டனர் எனக் குறிப்பிட்டுள்ளாய்.

தம்பி!

கிறிஸ்தவன் என்ற பெயரை வைத்துக் கொண்டு அந்தப் பெயருக்கு நம்மில் எத்தனை பேர் இழுக்குத் தேடுகிறோம். எத்தனை பேர் அதன் சீரினைச் — சிறப்பினை — எண்ணாது வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஆம் .... மாற்றார்கள் கிறிஸ்தவர்களாகிய எம்மிடம் எதையோ, எதையெல்லாம் எதிர்பார்க்கிறார்கள். ஏன் என்று எண்ணிப் பார்த்தாயா?

நாம் சிறு தவறு செய்துவிட்டாலும் — கிறிஸ்தவரெல்லாம் இப்படித்தான் என நாம் செய்யும் சிறு தவறுகளையும் பெரிதாக்கி குற்றம் காண்கிறார்கள்; குறை கூறுகிறார்கள். ஏன் இந்நிலை?

நம்முடைய சொல்லும், செயலும் கிறிஸ்துவைப் பிரதிபலிக்க வேண்டுமெனவும்-நாம் ஒவ்வொருவரும் கிறிஸ்துவில் வாழவேண்டுமெனவும் ஆசிக்கின்றார்கள் போலும்.

கிறிஸ்தவன் என்றாலே, ''கிறிஸ்து+அவன்'' என்றுதானே பொருள்படும். இப்பொருளுக்கு மாறாக நம் வாழ்வு அமையுமானால்—கிறிஸ்துவின் வாழ்வோடு இணையாது எதிராகச் செல்லுமானால், என்ன பயன்? ''கிறிஸ்தவனே உன்பெருமையை அறிந்துகொள்'' என்ற பாப்பரசர் சிங்கராயரின் பொன்மொழிகளை அறியாதவன் கிறிஸ்தவன் என்ற சொற் பொருளின் சீரினை சிறப்பினை அறியாதவனே.

தம்பி!

உலகத்தையெல்லாம் தன் ஒரே குடையின் கீழ்கொண்டு வரவிரும்பிய மாவீரன் அலெக்சாண்டரைப் பற்றி நீ கேள்விப்பட்டிருப்பாய். சரித்திர ஏடுகள் அவனின் புகழை பெருமையை இன்றும் பறைசாற்றுகின்றது, பாராட்டுகின்றது. வள்ளுவரின் குறள்

''எண்ணிய எண்ணியாங்கு
எய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்'' — என்பதற்கு

இலக்கணமாக விளங்கியவன் அவன். அத்தகைய மாவீரன் ஒருநாள் தனது படைவீரர்கள் தங்கி இருந்த பாசறைகளைப் பார்வையிட்டுக் கொண்டு வந்தான். அப்பொழுது ஒருவன் போர்வீரனென்று சொல்வதற்கே தகுதியற்றவனாக வாழ்வதைக் கண்டான், அப் போர் வீரனைப் பார்த்து, தனது அதிகாரத் தொனியில் - ஆணவச் செருக்குடன் கேட்டான் ''உன் பெயர் என்ன'' என்று போர் வீரனோ ஐந்தும் கெட்டு, அறிவும் கெட்ட நிலையில் ''அலெக்சாந்தர்'' எனப் பதிலிறுத்தான். இப்பெயரைக் கேட்ட ஒரு சில மணித்துளிகளுக்கு அரசன் எவ்வித பதிலோ சொல்லாது திகைத்து நின்று விட்டான். பின்பு, சொன்னான்: ''மாவீரனாகிய என் பெயரை வைத்துக்கொண்டா இத்தகைய இழிந்த - கோழத்தனமான வாழ்க்கை நடத்துகிறாய்; உடனடியாக உன் பெயரை மாற்றிக் கொண்டு என்கண்ணிற்படாது ஓடி மறைந்து

[13ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**இளைஞர் இல்லம்......**

[12ம் பக்கத் தொடர்ச்சி]

விடு அல்லது உன் பெயருக்கு ஏற்றவண்ணம் வீரவாழ்க்கை நடத்துபவனாக மாறு.''

தம்பி,

இக்கதையில் எவ்வளவு உண்மைப் பொருள் பொதிந்துள்ளது. சற்றுச் சிந்தித்துப்பார்.... நாமும் 'கிறிஸ்தவன்' என்ற ஒப்புயர்வற்ற பெயரை வைத்துக்கொண்டு அந்தப் பெயருக்கு இழுக்கு ஏற்பட வாழலாமா? அது வாழ்வாங்கு வாழ்வாக அமையுமா? என்று எண்ணிப்பார்....?

மீண்டும் அடுத்த கடிதத்தில் சந்திப்போம்.

வணக்கம்

அன்புள்ள,

**அரியண்ணா.**

---

**திருமறை அறிவு மன்றம்......**

[11ம் பக்கத் தொடர்ச்சி]

மிகவும் நன்றாக எடுத்துக்காட்டியுள்ளார். கிறீஸ்துநாதர் கெத்சமனி தோட்டத்தில் செபித்தார்; அப்பங்களைப் பலுகப் பண்ணிய பின் செபித்தார்; கப்பர்நாகூம் ஊரில் அநேகரைச் சுகப்படுத்தி பின்பு செபித்ததாக மாற்கு, மத்தேயு, லூக்காஸ் என்பவர்கள், தத்தம் சுவிசேசங்களில் கூறியுள்ளார்கள். ஆனால் லூக்காஸ் இவைகளைவிட, இன்னும் எட்டுச் சந்தர்ப்பங்களில் கிறீஸ்துநாதர் செபித்ததாகக் கூறியுள்ளார்.

ஞானஸ்நானம் பெறும்போது செபித்தார். (3,21)

தொழுநோயைக் குணமாக்கிய பின்பு, தனிமையான இடத்துக்குச் செபம் செய்யப் போனார். (5,16)

அப்போஸ்தலர்களைத் தெரிவு செய்யுமுன் முழுஇரவும் செபத்தில் செலவழித்தார். (6,12)

இராயப்பர், இயேசுவை, ''நீர் கடவுளின் மெசியா'' என்று கூறுவதற்கு முன்பு செபித்தார். (9,18)

இராயப்பருக்காக, விசேசமாக மன்றாடியதாக இயேசு கூறுகின்றார். (22,32)

இயேசு மறுரூபமானபோது செபித்தார்.

கிறீஸ்துநாதர் செபித்ததைப் பார்த்துவிட்டுத்தான் அப்போஸ்தலர்கள் தங்களுக்கும், செபிக்கக் கற்றுக்கொடுக்கும்படி கேட்டார்கள். (11,1)

சிலுவையில் தம் எதிரிகளுக்கபக இயேசு செபித்தார் (23,34)

தம் உயிரைக் கடவுளுக்கு ஒப்புக்கொடுத்து மரிக்கும் போதும், இயேசு செபித்தார். (23,46)

திருச்சபை, தனது பொது ஆராதனைகளுக்காகப் பாவிக்கும் செபங்களாகிய, Benedictus, Magnificat, Nunc Dimittis, Gloria in Excelsis எல்லாம் லூங்காஸ் சுவிசேசத்திலிருந்தே எடுக்கப்பட்டன.

இன்னும், செபத்தின் அவசியத்தை, கிறீஸ்து, அடிக்கடி தம் சீஷர்களுக்கு எடுத்துக் கூறியுள்ளார். நள்ளிரவில், தன் நண்பனிடம் வந்து, அப்பம் கடன்கேட்டவரைப் போன்று, விடாமுயற்சியாக செபத்தில் நிலைத்திருக்க வேண்டுமென்கிறார் (11,5-13). மனந்தளராமல் எப்பொழுதும் செபிக்க வேண்டுமென்பதற்கு: அநீதியுள்ள நீதிபதியின் முன் நிற்கும் கைம்பெண்ணின் உவமையைக் காட்டியுள்ளார் (18,1-8). எந்த நேரமும் செபித்து விழிப்பாயிருங்கள் என்று கிறீஸ்து கூறுகின்றார் (21,36). பரிசேயனும் ஆயக்காரனும் என்னும் உவமையைக் கூறி, நாம் எவ்விதம் செபிக்க வேண்டுமென்று காட்டியுள்ளார் (18,13). ★

---


**தொண்டன்**

| | |
|---|---|
| வருட சந்தா (தபாற் செலவு உட்பட) | 3-50 |
| 6 மாதங்களுக்கு (தபாற் செலவு உட்பட) | 2-00 |
| தனிப்பிரதி ( ,, ,, ,, ) | -30 |

**விளம்பர விகிதம்**

(ஒருமுறை பிரசுரிப்பதற்கு)

| | | |
|---|---|---|
| 3 × 3 | அங்குலம் | ரூ. 10/- |
| 3 × 4 | ,, | ரூ. 15/- |
| 4 × 6 | ,, | ரூ. 25/- |
| 6 × 6 | ,, | ரூ. 40/- |
| 8 × 6 | ,, | ரூ. 50/- |
| 9 × 7 | ,, | ரூ. 60/- |

சந்தாக்களையும், விளம்பரங்களையும் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

**தொண்டன் நிர்வாகி,**
ஆயர் இல்லம், மட்டக்களப்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தாண்டவன்வெளி - இருதயபுர இளைஞர் மன்றம்.

சென்ற ஆனித் திங்கள் 4ம் நாள் எமது பங்கின் இளைஞருக்கு ஒரு பொன்நாள். தாண்டவன்வெளி இருதயபுர இளைஞர்கட்கும், இள மங்கையர்க்கும் என்றுமில்லா உற்சாகத்தை உண்டுபண்ணிய உன்னதமான நன்நாள்.

மடைதிறந்த வெள்ளமிதா! துள்ளிவரும் பெருநதியா!! பூ மலர்ந்த புதுச்சோலையா!!! என்னே இது எனக் கண்டோர் வியக்கும் வண்ணம் காளையரும் கன்னியரும் தாண்டவன்வெளிக் 'கிளெனி' (Glennie Boys School) ஆண்கள் பாடசாலை முன்றலில் கூடி நின்ற காட்சியே காட்சி. தாண்டவன்வெளி இருதயபுரக் காளையர்க்கும் கன்னியர்க்கும் இல்லையே ஓர் மன்றம் என்ற குறை நீங்கக் கூடியது இம்மாபெரும் பொதுக் கூட்டம்.

அன்றுமாலை 6 மணிக்கு இம் மன்றத்தினை அருட்திரு சுவாமிநாதன் அடிகள் ஆரம்பித்து வைத்தார். கூட்ட ஆரம்பத்தில் இல்லறத் தூதுவர் யேசுதாசனின் இறைவணக்கப் பாடல் இடம் பெற்றது குறிப்பிடத்தக்கது.

வான்வெள்ளிக் கூட்டமோ, அல்ல வயல் வெளியில் நாரைகளோ என வீற்றிருந்த காளையர்க்கும் கன்னியர்க்கும் கருத்துரை வழங்கினார் பங்குத்தந்தை மறைத்திரு J. அலெக்சாண்டர். பின்னர் பேசிய அருட்திரு பீற்றர் துரைரெத்தினம் அடிகள் இளைஞர் மன்றத்தின் குறிக்கோள்கள் பற்றி விளக்கிக் கூறினார் இவரைத் தொடர்ந்து ஆசிரியர் திரு. L. M. ஜோசப் B. A. அவர்கள் சொற்பொழிவு சிறப்பாய் அமைந்து அனைவரினதும் உள்ளங்களைக் கவர்ந்தது. இவரது புரட்சிகரமான கருத்துகளின் மூலம் எமது மன்றத்திற்குப் புதுமெருகூட்டி, உணர்ச்சியைத் தட்டியெழுப்பி உற்சாகத்தை உருவாக்கி, சிந்திக்கும் சிற்பிகளாய் வளர எம்மைத் தூண்டிவிட்டார்.

ஈற்றில் பதவியாளர் தெரிவு நடைபெற்றது. செல்வன் A. C. S. இம்மானுவேல் தலைவராகவும், செல்வன். J. பத்திநாதன் செயலாளராகவும், செல்வி றஞ்சினி பிரான்சிஸ் பொருளாளர், உதவிச் செயலாளர் என்னும் கூட்டுப் பதவிக்கும் தெரிவு செய்யப்பட்டனர். இவர்களுக்கு உறுதுணையாக ஏழு அங்கத்தவர்களைக் கொண்ட ஒரு நிர்வாகக் குழுவும் அமைக்கப்பட்டது. பின்னர் அருட்திரு சுவாமிநாதன் அடிகள் நன்றியுரை வளங்கினார்.

## ஆத்திகன் பேசுகிறான்

மறை பொருள் இல்லை யென்பார்
    மதியினர் என்று சொல்வேன்!
குரைகடல் வயிற்றின் முத்துக்
    குவியலுக் கென்ன பேரோ?
தரை மகள் ஒளித்திருக்கும்
    தாதுவை என்ன என்பீர்?
அரையறிவோடு பேசும்
    ஆணவ மனிதா நீயும்,

காணாத பொருளை நாங்கள்
    கடுகளவும் நம் போ மென்று
வீணாகப் பேசுகின்றீர், மேற்கே
    வெள்ளையர் வாழும் நாட்டை
நானாகப் பார்த்ததில்லை ஆயின்
    நம்புகிறேன் என்றால் யாரும்
'ஏனா'மெனக் கேட்கமாட்டார்
    இதுபோன்றே கண்களுக்கு,

தெரியாத பொருளொன்றுண்டு
    தெய்வ மென்றதற்குப் பேர்
புரியாத புதிர் இஃதென் பேன்
    புத்தியில் தெளிந் தோர் கூட
அறியாது குழம் புகின்றார்
    அதனாலே வந்த சோர்வால்
தெரியாமற் சொல்லுகின்றார்
    தெய்வமே இல்லை யென்று!

அணு வொன்று வெடித்த தாலே
    அகிலமே பிறந்த தென்பார், அந்த
அணு எங்கே இருந்த தென்றால்
    அதற் கொரு வழியைச் சொல்லார்!
தினந் தினம் அறிவியலில்
    திகைப்பூட்டும் புதுமை செய்யும்
மனிதரே உங்கள் ஞானம்
    'மட்டம்' தான் அறிந்து கொள்வீர்!

மனிதர்கள் கூட அந்த
    மந்தியின் குலந்தா னென்று
குணங்களை ஒப்புநோக்கி
    கொண்டுள்ள உருவம் நோக்கி
இனவரலாறு சொன்ன
    இணையற்ற டார்வின் பேச்சில்
அணுவள வேனும் உண்மை
    இல்லை யென்றடித்துச் சொல்வேன்!

வானரம் மனிதர் தோன்ற
    வழியாக அமைந்த தென்றால்
ஏனின்று மட்டும் இந்த
    இணைப்பினில் மாறுபாடு?
ஞானத்தில் மனிதர் காலை
    ஞாயிறாய் விளங்கி நிற்க
கானகக் குரங்கு இன்னும்
    மரத்திலே பாய்வ தென்ன?

எஸ். அரியரெத்தினம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மாறாக இருந்தால்.........

சோவென மழை கொட்டிக்கொண்டிருக்கிறது, சோழகக்காற்று ஊரையே கலக்கிக் கொண்டிருக்கிறது; புயலோவென மக்கள் மனம் கலங்கிக்கொண்டிருக்கின்றனர்; வீதியால் சென்றவர்கள் இனியும் முன்னேற முடியாதென்ற நம்பிக்கையிழந்த நிலையில் ஒதுக்கிடம் நோக்கி ஒதுங்க, மனிதரைப்பின்பற்றுபவனபோல் மாடுகளும் ஒதுங்க, மின்னல் கோடிட்டு கண்களையே மறைக்க, உனக்கு நான் சளைத்தவனல்ல' என்று எச்சரிக்கைக் குரல் எழுப்புவதுபோல் இடி முழங்க, சூழ்நிலையே மாறி, கணத்துக்குக் கணம் கலக்கம் எல்லோர் மனதிலும் குடிகொள்ளும் வேளை....

கடிதத்தை மறுபடியும் ஒருமுறைபடித்துவிட்டு, மடித்துத் தன் மேசையின் மேலுள்ள காகித அமர்த்தியின் கீழ் வைத்து விட்டு, கைவிளக்குடன் புறப்படுகின்றான் குமார். ஆம்! சில நிமிடங்களுக்கு முன் அவனுக்கு கிடைத்தசெய்தி அவனை, இயற்கையின் இன்னல்களைக் கூடப் பொருட்படுத்தாமல் புறப்படச்செய்தது. வைத்தியசாலையில் ''ராம்'' உயிருக்காகப்போராடிக்கொண்டிருக்கின்றான்.

''நீ போகின்றாயே, உனக்குத் தெரியும் அவன் நிலைமை. ஒரு வாரமாக அவனுக்கு இரத்தம் தேவைப்படுகின்றது. உன் உடல் நிலையோ அவ்வளவு நன்றாகஇல்லை. இரத்தம் கொடுக்கும் நிலையில் நீயில்லை. எனவே நீ இப்போ அங்கே போகாதே'', இவ்வாறு கூறுகின்றது அவன் உள்மனம். ஏன்? குமாரும் சென்றவாரம் இருதய பலவீனத்தால் அவஸ்தையுற்ற அரை நோயாளி. எனவே, இரத்தம் கொடுத்தால் அவன் உயிரும் அவல நிலைக்குள்ளாகும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

ஆனால், பாசம் பழிவாங்குகிறது அவனை; அன்பு-கொடுக்கும் அவன் புறக்படுகின்றான். மனைவியும் மூன்று குழந்தைகளும் மனக்கண்முன் தோன்றுகின்றனர். மனைவியின் வேதனையும், மக்களின் மனக்கலக்கமும், அவனைப் பாதிக்காமலிருக்காது. அன்பின் கடன்-கடித உருவில் இடம் பெறுகின்றது.

''மாலா! இந்தக்கடிதம் மூன்று நாட்களுக்குப்பின்பே கிடைக்கப்பெறும் தூர இடத்தில் இருக்கும் துரதிஷ்டசாலி நான். இக்கடிதம் உன்னை வந்தடையும்போது நிச்சயம் உன்னையும் உலகையும் பிரிந்தவனாயிருப்பேன். என் நண்பன் ராம் உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கின்றான். அவனுக்கு உடனடியாக இரத்தம் கொடுபடல் வேண்டும். ஒரேயின இரத்தம் கொண்டுள்ளனவனாக நான் இருந்தாலும், கொடுக்கத் தயங்கியதற்கு காரணம் உனக்குத் தெரியும்.

உன் உழைப்பு, மூன்று குழந்தைகளையும் ஆளாக்கப் போதுமானது. ஆனால், பாவம் ராம்! அன்றாட வாழ்க்கைகே திண்டாடும் நிலையிலுள்ளவன் என்பது நீயறிந்த உண்மை. ஏதடா, இவன் இப்படியெல்லாம் சமாதானம் கூறுகின்றானே என்று எண்ணி மனத்தை அலையவிடாதே மாலா! இதே சந்தர்ப்பம் மாறாக இருந்தால்! ஒரே கணம்! ஆம். நான் ராமின் நிலைமையில் இருந்தால், எந்த ஒருத்தியும் எடுக்கும் முடிவு இதாகத்தான் இருக்கும். அப்படி இரத்தம் கொடுத்து என்னையும், என் குழந்தைகளையும் காப்பாற்ற வாயப்பில்லாத நீரா அவர் நண்பன் என்று கூறிக்கொள்கிறீர் என்று கேட்கத் தோன்றும். நிலைமை ஒன்று, நிலைகள் வேறு; குழந்தைகளை நீ நிச்சயம் ஆளாக்குவாய் என்ற அசையாத நம்பிக்கையுடன் இக் கடிதத்தை முடிக்கின்றேன். அனைவருக்கும் என் அன்பு முத்தங்கள்.

இங்ஙனம்

உன் குமார்.

கடவுளை மனதில் தியானித்த வண்ணம் மனைவி மக்கள் நினைவாகப் புறப்படுகின்றான் குமார். அதே நேரம் அவன் மனம் பதினைந்து வருடங்களுக்கு முன் பள்ளி மாணவனாக இருக்கும் போது, தமிழாசிரியர் தம்பாப்பிள்ளை

**செல்வி. றெ. விலியம்,** திருமலை.

கூறிய வசனம் நினைவுத் திரையில் எழுகிறது. எந்த ஒரு நிகழ்ச்சியும், அது இன்பமானதாக இருக்கலாம் அல்லது துன்பமானதாக இருக்கலாம்; ஆனால் எவர்க்கு அது ஏற்படினும், அந்நிலையில் நானிருந்தால்! என்ற சிந்தனையை மனதில் ஏற்படுத்தி, அந்த நிலையில் நான் மற்றவர்களிடம் எதை எதிர்பார்ப்பேனோ,

[16ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**உனது எதிர்காலம் என்ன?....**

[1ம் பக்கத் தொடர்ச்சி]

பெறுவதுதான் மனித வாழ்க்கை. இவ்வாழ்க்கையினுள்ளேதான் அவன் அடையவேண்டிய இலக்கு; முடிக்கவேண்டிய சாதனை; இன்னும் எத்தனையோ சூறுவளிப் போராட்டங்களும் இருக்கின்றன. ஆகையால் மனித வாழ்க்கை பொறுப்பற்ற, பொருளற்ற வாழ்க்கையல்ல.

புரியாத குழந்தைப் பருவத்திலிருந்து வளர்கின்ற பிள்ளைப் பருவம் கடந்து வாழப் போகும் வாலிபப் பருவத்தை அடையும் போதுதான், மனிதன் உண்மையாகவே, சுயமாக இயங்கும் வாழ்க்கையின் படியை அடைகின்றான். தொடக்கம் நலமாக இருந்தால் முடிவும் சுகமாக இருக்கும். ஆனால் தொடக்கமே சரியாக இல்லாவிட்டால் ... .... நினைக்கவே குலை நடுக்கம் பிடிக்கின்றது.

இதிலிருந்து நாம் அறிய வேண்டியது, வாலிபப் பருவம் — இளைஞர் பராயம், வாழ்க்கையில் மிக முக்கியமான - சிந்தித்துச் செயலாற்ற வேண்டிய கட்டம் என்பதுதான்.

இளைஞனே! உன் எதிர்காலமென்ன? நேற்றோடு உன் பிள்ளைப் பருவம் முடிந்து விட்டது. இன்று புதுப் பருவம். உலக ஏடு திறந்து கிடக்கின்றது. அதில் வரலாற்றை வரையும் தூரிகை உன் சுதந்திரமான கைகளில் தரப்பட்டிருக்கின்றது. புது வரலாறு எழுதப் போகின்றாயா? அல்லது, பழைய வரலாற்றை மாற்றியமைக்கப் போகின்றாயா? அன்றேல், இருந்த வரலாற்றுடன் தொடர்ந்து மிருக்கப் போகின்றாயா? சிந்தித்துப் பார் .... .... சமுதாயத்தின் முதுகெலும்பு நீ! நாட்டின் முக்கியமான மனிதர்களில் நீயும் ஒருவன். ஆகையால் நாளைய சமூகத்தை உன்னால் நல்வழியில் உருவாக்க முடியும். அல்லது உருக்குலைக்கமுடியும். இந்த ஆக்கம் அல்லது அழிவு உனது தனி வாழ்க்கையைப் பொறுத்திருக்கின்றது. நீயே உன்னை அழிக்க முனைந்தால் உன்னைப் போலவே சமுதாயமும் அழிய முனையும், ஆனால் முன்னேற்றத்துக்கு விதியாகத் திறந்த மனதுடன், தூய காற்றைச்' சுவாசிக்கிறவனாக இருந்தால், சமூகமும் திறமுள்ளதாக அமைக்கப்படும் இதையே பெரியவர்கள் ''உள்ளத்திலே ஒளியுண்டாயின்'', சமூகத்தில் வழங்கும் ''வாக்கிலும் ஒளியுண்டாகும்'' என்று கூறியிருக்கின்றனர். தகுதியான இளைஞனாக வாழ்ந்தால் சமூகமும் உத்தமமாக்கப்படும். ஏனெனில் தனிமனிதன் நேர்மையும் நியாயமுமுள்ளவனாகத் துலங்கினால் சமூகமும் அப்படியே துலங்கும். சிறந்த சமுதாயம் உண்டாக வேண்டுமென்றால் அதை உண்டாக்கும் மனிதன் சிறந்தவனாக இருக்கவேண்டும். விசேஷமாக இளைஞனே! நீ, சமூகம் எனும் மாளிகையில் ஒரு பழுதுபட்ட செங்கல்லாக இருக்கவே கூடாது. இருந்தால், உனது முடிவு .... .... அதன் பின்னணியில் விளங்கும் சமூகத்தின் முடிவு .... .... அந்தோ! பரிதாபம். (வளரும்)

**அருட்திரு. ஸ்ரன். அருள்குணஞானம்**

---

**மாறாக இருந்தால்........**

[15ம் பக்கத் தொடர்ச்சி]

அதையே தான் நாம் செய்தல் வேண்டும். உனக்கு மற்றவர்கள் தீங்கிழைக்கக் கூடாது என்று நீ எதிர்பார்த்தால் அத்தீங்கை நீ அவர்களுக்குச் செய்யக்கூடாது. அப்படியே நன்மையையும் தன் கடந்த கால நல் எண்ணங்களை முன்னணியாகக் கொண்டு, நிகழ் காலத்தை வளமாக்குகின்றான். குமார் ராமை மீட்கும் பணிக்கு முன்னேறுகின்றான்.

வைத்தியசாலையை அடைந்த குமார், ராம் இருந்த பகுதிக்குப் பொறுப்பாகவுள்ள நேர்ஸிடம் சென்று தன் எண்ணத்தை வெளியிடுகின்றான். ஆனால், அப்போதுதான் அவனறிந்த செய்தி அவனை அதிர்ச்சிக்குள்ளாக்குகின்றது. ஆம்! மாலாவின் தம்பி, ரஞ்சிற் இரத்தம் கொடுத்து ராமைக் காப்பாற்றியுள்ளான் என்ற உண்மை.

ராம் சில மணித்துளிகளில் சுய அறிவு பெற்று மனைவி மக்கள் உயிர்பிச்சை கொடுத்த ரஞ்சிற், உயிரைக் காக்க ஓடோடி வந்த குமார் உட்பட அனைவரையும் உற்று நோக்குகின்றான். தன் உயிரை மற்றுயிர்களுக்காக மனமுவந்தளித்த மனுமகன் கிறிஸ்துவாகக் காண்கின்றான் ரஞ்சிற்றை ராம் உயிர் நண்பனை, இன்னல் அடுத்துள்ளது என்றறிந்து உதவ ஓடோடி வந்த குமாரை நோக்குகின்றான்.

''இன்பமோ துன்பமோ எந்நிலை எவர்க்கு ஏற்படினும் அந்நிலை எனக்கேற்படின் என்ன செய்வேன்? எதை மற்றவர்களிடமிருந்து எதிர்பார்ப்பேன்? என்ற எண்ணம் எம்மவர்களின் மனதினில் ஏற்படுமானால் நடமாடும் கிறீஸ்துவாக, ''கிறீஸ்தவன்'' என்ற சொல்லுக்கு இலக்கணமாக நாம் திகழலாம் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

---

இப்பிரசுரம் மட்டக்களப்பு 18, மத்திய வீதியிலுள்ள கத்தோலிக்க அச்சகத்தில், மனேஜர் யோசேப் B. மறே S. S. J. அவர்களால் அச்சிடப்பட்டு, மகா வந். வ. தியோகுப்பிள்ளை, துணை ஆயர், மட்டக்களப்பு அவர்களால் 1-7-70ல் வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media